<u>திருப்தியாக்கி……</u>

Praise the Lord:
Let us pray. ..

கிறிஸ்து இயேசுவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள்.

நமக்கு எவ்வளவோ பெலவீனங்கள், பற்றாக்குறைகள் இருந்தாலும், கிறிஸ்துவின் கிருபை நம்மை சூழ்ந்துகொண்டிருப்பதால், வாஞ்சையோடு தேவனிடத்தில் ஜெபிக்க வந்திருக்கிறோம்.

ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். என்ற வசனத்தின்படியே நாம் கர்த்தரிடம் மன்றாட ஆயத்தப்படுவோம்.

*கர்த்தருடைய வசனத்தை வாசித்து தியானிக்கும்போது, ஜீவனுள்ள* வசனங்கள் நமக்கு பொறுமையையும், ஆறுதலையும், நம்பிக்கையையும் கொடுத்து நம்மை ஆயத்தப்படுத்தும்.

<u>சங்கீதம்/ Psalm 91:14-16</u> (பக்கம் 728)

14. அவன் என்னிடத்தில் **<u>வாஞ்சையாயிருக்கிறபடியால்</u>** அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் **<u>அறிந்திருக்கிறபடியால்</u>** அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.
15. அவன் என்னை **<u>நோக்கிக் கூப்பிடுவான்</u>**, நான் அவனுக்கு **<u>மறுஉத்தரவு</u>** அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.
<u>16. நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.</u>

"Because he loves me," says the LORD, "I will rescue him; I will protect him, for he acknowledges my name.
He will call upon me, and I will answer him; I will be with him in trouble, I will deliver him and honor him.
With long life will I satisfy him and show him my salvation." (NIV)
I will reward them with a long life and give them my salvation." (NLT)

கர்த்தரிடத்தில் <u>வாஞ்சையாயிருக்கிறோம்</u>.
கர்த்தரை <u>அறிந்திருக்கிறோம்</u>. மேலும் மேலும் அறிந்து வருகிறோம்.
கர்த்தரை நோக்கி மன்றாட,
கிறிஸ்து இயேசுவின் நாமத்தினாலே ஒருமனப்பட்டு ஒன்றுகூடியிருக்கிறோம்.

அவன் என்னை <u>நோக்கிக் கூப்பிடுவான்</u>, நான் **அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்**;
<u>நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.</u>

எவ்வளவு நாட்கள் வாழ்கிறோம் என்பதல்ல. நாம் வாழும் நாட்கள் கர்த்தருக்குள் திருப்தியாக இருக்கவேண்டும். அவர் நம் இரட்சிப்பை பூரணப்படுத்த, நம்மை வழுவாதபடி காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே நம்மை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர் நம் தேவன்.

*கர்த்தரை மேலும் மேலும் அறிந்து அவரோடு நெருங்கி வாழ வாஞ்சித்து,*
ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்த ஆயத்தமாகுங்கள்.

<u>நீடித்த நாட்களால் நம்மைத் **திருப்தியாக்கி**, அவர் கொடுத்த இரட்சிப்பை பூரணப்படுத்துவார்.</u>

----------------------------------------

*<u>Ref: Dictionary:</u>*

<u>தமிழ்-ஆங்கில அகராதி:</u>

திருப்தி: நிறைவேறியதால் அல்லது போதும் என்ற எண்ணத்தால் மனம் அடையும் அமைதி: மன நிறைவு.
Satisfaction, Contentment. (கன்டென்ட்மென்ட்)

<u>ஆங்கில-தமிழ் அகராதி:</u>

Satisfaction: திருப்தி, போதுமென்ற மனநிலை.
Contentment: . (கன்டென்ட்மென்ட்) Mental Satisfaction, மனத்திருப்தி.

<u>English Dictionary:</u>

Satisfaction: **1.) an act of satisfying; fulfillment; gratification. 2). the state of being satisfied; contentment**.
…………….3.) (Christianity) the atonement for sin by the death of Christ

Contentment: 1. mentally or emotionally satisfied with things as they are
2. assenting to or willing to accept circumstances, a proposed course of action, etc

<u>Bible:</u>

Content: மனரம்மியமாக

----------------------------------------

முழுமையாக நாம் விரும்புவதைப் பெற்று, திருப்தியடைவதுமுண்டு.
இருப்பதை போதுமென்ற மனதோடு விரும்பி ஏற்று, திருப்தியடைவதுமுண்டு.
இந்த உலகத்திலே, முழுமையாக நாம் விரும்புவதைப் பெற்று திருப்தியடைவது போல சூழ்நிலை வந்தாலும், அது ஒரு நிரந்தரமான திருப்தியாக இருக்காது.
கர்த்தர் கொடுத்திருக்கும் வாழ்க்கையில் போதுமென்ற மனநிலையோடு நமது வாழ்க்கையை அவருடைய நாமத்துக்கே பயன்படுத்துவோமானால்,
நீடித்த நாட்களால் நம்மைத் திருப்தியாக்கி, இரட்சிப்பை நமக்கு பூரணப்படுத்துவார்.
அவர் கொடுக்கும் திருப்தி ஆத்மீக திருப்தி, பூரணமான திருப்தி.

1 தீமோத்தேயு / 1 Timothy 6:6-8 (பக்கம் 290)
6. போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.
7. உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும்கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம்.
8. உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்.
But godliness with contentment is great gain. [7]For we brought nothing into the world, and we can take nothing out of it. [8]But if we have food and clothing, we will be content with that. (NIV)

உண்ண உணவு போதுமென்றல்ல....அதிகமதிகமான ருசியை தேடுகிறோம்.
உடுக்க உடை போதுமென்றல்ல......,இன்னும் சிறப்பாக இருக்க நாடுகிறோம்.
ஆண்டவர் ஏனோ இருக்கும் இடத்தை இங்கு சொல்லவில்லை.
உணவுக்கும் உடைக்கும் மேலாக இருக்கும் இடத்திற்கு இன்னும் சிறப்பை தேடுகிறோம்..
போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.
இந்த வசனம் நம்மிலே ஜீவிக்க, நம்முடைய பெலத்தினாலே முடியாமல் இருக்கலாம்.
ஆனால் கிறிஸ்துவோடு நாம் இருக்கும்போது நம்மாலே முடியும்.
*ஆலோசனையில் ஆச்சரியமானவர் நம்மோடு இருக்கும்போது, நம்மை அவர் வழிநடத்துவார்.*

பிலிப்பியர்/ Philippians 4:11-13 (பக்கம் 274)
11. என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் **மனரம்மியமாயிருக்கக்** கற்றுக்கொண்டேன்.
12. தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் **எல்லாவற்றிலும் திருப்பதியாயிருக்கவும்** பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.
13. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.
I am not saying this because I am in need, for I have learned to be content whatever the circumstances. [12]I know what it is to be in need, and I know what it is to have plenty. I have learned the secret of being content in any and every situation, whether well fed or hungry, whether living in plenty or in want. [13]I can do everything through him who gives me strength. (NIV)
*(மனரம்மியமாயிருக்க.....Contentment என்று ஆங்கிலத்திலே மொழிபெயர்க்கப்பட்டள்ளது.)*
*11வது வசனத்தில்..... கற்றுக்கொண்டேன். 12வது வசனத்தில்..... போதிக்கப்பட்டேன்.*
நாம் வேதத்திலிருந்து எவ்வளவோ கற்றுக்கொள்கிறோம்.
நாம் எவ்வளவோ காரியத்தில் போதிக்கப்பட்டிருக்கிறோம்.
ஆனால் அதை செயல்படுத்த கிறிஸ்து நம்மோடு இருக்கவேண்டும்.
*13வது வசனத்தில்....*
என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.
கிறிஸ்துவின் ஐக்கியம் நமக்கு இல்லையென்றால், நாம் கற்றுக்கொண்டதையும் நமக்கு போதிக்கப்பட்டதையும் நம்மாலே செயல்படுத்தமுடியாது. தியானித்துப்பாருங்கள்.
என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. (யோவான் 15:5)
.... apart from me you can do nothing. (NIV)
*இப்படி எவ்வளவோ யோசனைகள் நமக்குள் வந்து,....*
*ஆண்டவரே உமக்கு பிரியமான பல காரியங்களை செய்ய அறிந்திருந்தும் செய்ய முடியவில்லையே....*
*என நம்மை வருத்தப்படுத்தினாலும், நாம் வருத்தபட தேவையில்லை....*
*யெகோவா ஷம்மாவாக நம்மோடு இருக்கும் கிருபை நிறைந்தவரை நோக்கி....*
ஆண்டவரே நீர் எம்மோடு இருந்து வழிநடத்தும் என்று கூப்பிடுங்கள்.......
அவன் என்னை **நோக்கிக் கூப்பிடுவான்**, நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்;
நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்."
என்று வாக்குக்கொடுத்த நம் தேவன் நம்மை பெலப்படுத்துவார்.
***நம்முடைய தேவன் இரக்கமும் உருக்கமும் நீடிய பொறுமையும், பூரண கிருபையும் நிறைந்தவர்.***

சங்கீதம்/ Psalm 36:7-9 (பக்கம் 691)

தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள்.
8. உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள்; உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்.
9. ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்.
How priceless is your unfailing love! Both high and low among men find [a] refuge in the shadow of your wings.
8 They feast on the abundance of your house; you give them drink from your river of delights.
9 For with you is the fountain of life; in your light we see light. (NIV)

கிறிஸ்துவின் வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிற நாம்,
அவருடைய ஜீவனுள்ள வார்த்தையிலிருந்து, அவருடைய நீதிகளை அறிந்து அதை கடைபிடிக்க தாகமுள்ளவர்களாக ஒவ்வொரு நாளும் வளருகிறோம்....

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் **திருப்தி**யடைவார்கள். (**மத் 5:6**)
Blessed are those who hunger and thirst for righteousness, for they will be filled. (NIV)
நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.
நீடித்த நாட்களாக திருப்தியாக்குவது மட்டுமல்ல, கிறிஸ்து கிருபையினாலே நமக்கு இரட்சிப்பை காண்பித்து அதை பூரணப்படுத்த அவர் நம்மோடு நமக்குள்ளே வாசம் செய்கிறார்.
இரட்சிப்பினாலே, இந்த உலகத்தின் வாழ்வுக்குப்பிறகும் அவரோடு நித்திய நித்தியமாக வாழக்கூடிய பூரண திருப்தியை நமக்கு கொடுத்திருக்கிறார். ஆமென்.

இந்த பூரணதிருப்தியை பெறாத, அறியாத நம் உற்றார் உறவினர் நண்பர்கள், இந்த ஆலயத்தை சுற்றியுள்ள மக்களுக்காக....தேவனை நோக்கி கூப்பிடுவோம்.
அவன் என்னை **நோக்கிக் கூப்பிடுவான்**, நான் அவனுக்கு **மறுஉத்தரவு அருளிச்செய்வேன்**;
என்று சொன்ன நம் தேவன் அவர்களையும் விடுவித்து இரட்சிப்பார். ஆமென்.

உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள் என்ற வாக்கின்படி...
*ஆலயத்திலே சகலமும் பரிபூரணமாக வாசம் செய்யும் கிறிஸ்துவினாலே திருப்தியடைகிறோம்.*
கர்த்தர் கொடுக்கும் திருப்தியினாலே நிறைந்து, ஒருமனப்பட்டு, இங்கு ஒன்று கூடியிருக்கும் நாம்...
நமக்குள்ளே எந்த குறைகள் வேதனைகள் இருந்தாலும்,
நமது நண்பர்களுக்கு என்ன குறைவுகள் இருந்தாலும்....
ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.
கர்த்தர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும்.

நம் விண்ணப்பங்களைக் கேட்டு, பதில்கொடுத்து....
நீடித்த நாட்களால் நம்மைத் திருப்தியாக்கி,
அவராலே நாம் பெற்ற இரட்சிப்பை நமக்குப் பூரணப்படுத்துவார். ஆமென்.

*(Satisfaction என்ற வாரத்தைக்கு இன்னமொரு அர்த்தத்தை English Dictionaryல் வாசித்தேன்.)*
*Ref: Dictionary:*
Satisfaction: 1.) an act of satisfying; fulfillment; gratification. 2). the state of being satisfied; contentment.
…………….**3.) (Christianity) the atonement for sin by the death of Christ**
கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினாலே நம்முடைய பாவத்திற்கு பிராயச்சித்தம் கிடைத்தது
இதுதான் மிகச்சிறந்த திருப்தி.

எபேசியர்/ Ephesians 1:7 (பக்கம் 264)

தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே கிறிஸ்துவுனுடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு கிறிஸ்துவுக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. (எபேசியர் 1:7)
In him we have redemption through his blood, the forgiveness of sins, in accordance with the riches of God's grace. (NIV)
நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.

கர்த்தரிடத்தில் **வாஞ்சையாயிருக்கிறோம்**.
கர்த்தரை அறிந்திருக்கிறோம். மேலும் மேலும் **அறிந்து வருகிறோம்**.
கர்த்தரை நோக்கி மன்றாட,
கிறிஸ்து இயேசுவின் நாமத்தினாலே ஒருமனப்பட்டு ஒன்றுகூடியிருக்கிறோம்.
காத்தர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். ஆமென்.

மீண்டுமாக…..சங்கீதம்/ Psalm 91:14-16 (பக்கம் 728)

அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.
அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்;
ஆபத்தில் **நானே அவனோடிருந்து**, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.
நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.

"Because he loves me," says the LORD, "I will rescue him; I will protect him, for he acknowledges my name.
He will call upon me, and I will answer him; I will be with him in trouble, I will deliver him and honor him.
With long life will I satisfy him and show him my salvation." (NIV)
I will reward them with a long life and give them my salvation.” (NLT)

நம் விண்ணப்பங்களைக் கேட்டு, பதில்கொடுத்து….
நீடித்த நாட்களால் நம்மைத் திருப்தியாக்கி,
அவராலே நாம் பெற்ற இரட்சிப்பை நமக்குப் பூரணப்படுத்த, நம்மை வழுவாதபடி காக்கவும்,
தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே நம்மை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ள நம் தேவனை நோக்கி கிறிஸ்து இயேசுவின்மூலம் விண்ணப்பிக்க தயவுசெய்து எழுந்துநிற்போம்..

## Let us pray. ..

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*

For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.